www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi9T

13-12-2023.

## தென்காசி மாவட்டம்
## அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

வகுப்பு 9

தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

குறிப்பு: i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது

ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைத வேண்டும்

### பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக.** **15×1=15**

1) காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே - எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே ......... இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்

அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) எதுகை, மோனை, இயைபு ஈ) மோனை, முரண் அந்தாதி

2) பொருத்தமான வினையை எடுத்து எழுதுக.
கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக ............
அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் .........

அ) வந்தான், வருகிறான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை
இ) வந்தான், வருவான் ஈ) வருவான், வரமாட்டன்

3) மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

4) இம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்
இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

5) மாறுபட்டுள்ள குழுவினைக் கண்டறிக

அ) கலைக்கூடம், திரையரங்கம், ஆடுகளம், அருங்காட்சியகம்
ஆ) கடி,உறு, கூர், கழி
இ) வினவினான், செப்பினான், உரைத்தான், பகன்றான்
ஈ) இன், கூட, கிறு அம்பு

6) ஐந்து சால்புகளில் இரண்டு

அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்
இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்

7) 'கார் அறுத்தான்' - ஆகுபெயரின் வகையைச் சுட்டுக.

அ) பொருளாகுபெயர் ஆ) இடவாகுபெயர்
இ) காலவாகுபெயர் ஈ) சினையாகுபெயர்

8) திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை ...........

அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

9) நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு - இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே

அ) பாண்டிய நாடு, சேர நாடு ஆ) சோழ நாடு, சேர நாடு
இ) சேர நாடு, சோழ நாடு ஈ) சோழ நாடு, பாண்டிய நாடு

10) இளங்கமுகு, செய்கோலம் - இலக்கணக் குறிப்பு தருக.

அ) உருவகத்தொடர், வினைத்தொகை ஆ) பண்புத்தொகை, வினைத்தொகை
இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) பண்புத் தொகை, உருவகத்தொடர்

11) இந்திய தேசிய இராணுவம் ............... தலைமையில் ............ உருவாக்கினார்

அ) சுபாஷ் சந்திர போஸ், இந்தியர் ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்
இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

'காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடை கீறி வருக்கை போழ்ந்து
தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கதம் என்று இசையால்திசை போயது உண்டே!'

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



12) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

அ) பெரியபுராணம் ஆ) சீவக சிந்தாமணி

இ) புறநானூறு ஈ) சிலப்பதிகாரம்

13) இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) சீத்தலைச்சாத்தனார் ஆ) குடபுலவியனார்

இ) திருத்தக்கதேவர் ஈ) இளங்கோவடிகள்

14) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைகளை எடுத்தெழுதுக

அ) தேமாங்கனி - ஏமாங்கதம் ஆ) காய்மாண்ட - கமுகின்

இ) பூமாண்ட - போழ்ந்து ஈ) ஏமாங்கதம் - இசையால்

15) வருக்கை - என்பதன் பொருள் யாது?

அ) தேங்காய் ஆ) கொய்யாப்பழம் இ) வாழைப்பழம் ஈ) பலாப்பழம்

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **4×2=8**

**21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16) **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க**

அ) ஏறுதழுவுதல் முல்லை நில மக்களின் பண்பாட்டு அடையாளம்

ஆ இந்திய தேசிய ராணுவத்தில் ஜான்சி ராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது.

17) 'கூவல்' என்று அழைக்கப்படுவது எது?

18) சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?

19) கூட்டுப்புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.

20) அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ - இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?

21) 'தலை' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **5×2=10**

22) வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.

23) **மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டாள்

ஆ) தென்னை மட்டையிலிருந்து நார் எடுத்தார்

24) **தொடர் தரும் பொருளைக் கூறுக.** சின்னக்கொடி - சின்னகொடி

25) **கலைச்சொற்கள் தருக.** அ) Epigraphy ஆ) Treasury

26) **பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.**

அ) ............ பெரும் பொதுக்கூட்டம். (கடி, மா)

ஆ) ............ சிறந்தது. (சால, மழ)

27) **தமிழ் எண்களில் எழுதுக.**

அ) அரையாண்டுத் தேர்வில் நீங்கள் பெற விரும்பும் மொத்த மதிப்பெண் .........

ஆ) உன் நண்பர்களின் எண்ணிக்கை ............

28) 'கொடுத்தோர்' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **2×3=6**

29) அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்யவேண்டியவற்றை எழுதுக.

30) **குறிப்பு வரைக** - டோக்கியோ கேடட்ஸ்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

31) **உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி ஆவார். இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர். சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர். சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி. தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தவர். அடையாற்றில் 1930இல் அவ்வை இல்லம், 1952 இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

அ) சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர் யார்?

ஆ) டாக்டர் முத்துலட்சுமி எந்தெந்தச் சட்டங்கள் நிறைவேறக் காரணமாக இருந்தார்?

இ) டாக்டர் முத்துலட்சுமி அடையாற்றில் எந்த ஆண்டு அவ்வை இல்லம் நிறுவினார்?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **2×3=6**

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32) பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

33) ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பாதாகத் திருத்தக்கதேவர் பாடியுள்ளார்?

34) **அடிபிறழாமல் எழுதுக.**

'நீர்இன்று அமையா' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்

**(அல்லது)**

'அள்ளல்' எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரப் பாடல்

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **2×3=6**

35) தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக

36) தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37) பண்பாகு பெயர், தொழிலாகு பெயர் விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5×5=25**

38) அ) 'தூது அனுப்பத் தமிழே சிறந்தது' - தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.

39) அ) உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின்,'கால்முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திறக்கு ஒரு கடிதம் எழுதுக.

40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



www.Padasalai.Net www.TrbTnpsc.com



41) விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க.

> புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!
>
> **புத்தகத்திருவிழா**
>
> நாள் - செப்டம்பர் 14 முதல் 24 வரை
>
> இடம் - சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்
>
> நேரம் - காலை 5 மணி முதல் மாலை 6 மணிவரை
>
> (முதல் நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்)
>
> (நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியிடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்)
>
> அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்!

42) அ) என் பெற்றோர் மகிழுமாறு நான் செய்ய வேண்டியது

என் வீட்டின் நிலையறிந்து, தேவையறிந்து பொருள்கள் வாங்குவது

அலைபேசிப் பயன்பாட்டினைப் பத்து நிமிடங்களுக்கு மேல் நீட்டிக்காமல் இருப்பது

1.
2.
3.
4.
5.

வல்லம் - 627809
தென்காசி மாவட்டம்.

**(அல்லது)**

**மொழிபெயர்க்க**

Akbar said, "How many crows are there in this city?"
Without even a moment's thought, Birbal replied "There are fity thousand five hundred and eighty nine crows, my lord".
"How can you be so sure?" asked Akbar.
Birbal said, "Make your men count, My lord. If you find more crows it means some have come to vist their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives elsewhere".
Akbar was placed very much by Birbal's wit.

**பகுதி - V (மதிப்பெண்கள்: 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க.** **3×8=24**

43) அ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரை வழி நிறுவுக.

44) அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

**(அல்லது)**

ஆ) இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி' கதையின் மூலமாக விளக்குக.

45) அ) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.**

முன்னுரை - கல்வி - பெண்கல்வி - பெண்கல்வியின் பயன்கள் - சமூக மாற்றம் - சாதனைப்பெண்கள் - முடிவுரை.

**(அல்லது)**

ஆ) 'எனது பயணம்' என்னும் தலைப்பில் உங்களின் அனுபவங்களை வருணித்து எழுதுக.

- - - - - - - -

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com